FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364179

1. District : திருச்சிராப்பள்ளி PS: லால்குடி Year: 2026 FIR No.: 12 Date: 23/6/26
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act - 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 20/6/26 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 11.00hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 23/6/26 Time : 05.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 5 Km தொலைவு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : திருச்சி - விழுப்புரம் மெயின் ரோடு, சிறுகனூர் நால்
முறைக் காவல் எண் முகவரி ரோடு பிரியும் இடம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. ஸ்ரீதர் (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1/1/1982 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue : -
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Private Employee (g) Address : No.5, ARK city, மாயவன்குடி, ARK நகர், Trichy.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ராஜப்பன், பதிவுத்துறை அலுவலர், மாயவன்குடி சார்பதிவாளர், திருவரம்பூர் பதிவுத்துறை மாவட்டம், திருச்சி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
வரிசன் தினம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23 06 2026

23/6/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம் திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 23.06.2026ஆம் தேதி பணியில் இருந்தபோது காலை 08.00 மணியளவில் திருச்சி மாவட்டம், ஏ.ஆ.கே. நகர், பனையகுறிச்சி, ஏ.ஆர்.கே. சிட்டி, எண்.5ல் வசித்துவரும் மருதைபாண்டியன் மகன் புகார்தாரர் திரு.கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியம், பனையகுறிச்சி கிராமம், பஞ்சாயத்து கிளார்க் மாரியப்பன் மற்றும் புகார்தாரர் திரு.கார்த்திகேயன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இன்று 23.06.2026ஆம் தேதி காலை 08.45 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.12/2026, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி, 23/6/2026, அனுப்புநர் M.கார்த்திகேயன், வயது 33, த/பெ.மருதைபாண்டியன், எண்.5, ஏ.ஆர்.கே. சிட்டி, பனையகுறிச்சி, ஏ.ஆர்.கே. நகர்., திருச்சி மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி. ஐயா, நான், மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் Diploma in ECE படித்துள்ளேன். என் உடன்பிறந்த அக்காவின் கணவர் அருண்குமார். அவரும், நானும் கீழப்புலிவார் ரோட்டில் கடந்த 5 வருடங்களாக திருச்சி பெயிண்ட் & ஹார்டுவேர்ஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறோம். எங்கள் நிறுவனத்தில் அவரும் ஒரு பங்குதாரர் ஆவார். அவர் இதற்கு முன் ஹைதராபாத்தில் வேலை பார்த்து வந்தார். ஆகவே அவருக்கு திருச்சியில் யாரையும் தெரியாத காரணத்தால் என்னை திருச்சி மாவட்டம், பனையகுறிச்சி கிராமம், ஏ.ஆர்.கே.நகர், கிருஷ்ண கார்டனில் பிளாட் எண்.41 என்ற இடத்தில் சுமார் 2850 சதுரடி மனையை வாங்கி அதில் வீடு கட்ட உதவும்படி என்னிடம் கேட்டு கொண்டார். அவருக்காக நான் முன்னின்று மேற்படி இடத்தில் தரைதளம் மற்றும் முதல் தளம் தலா சுமார் 950 சதுரடியில் 2025 ஆண்டு வீடு கட்ட ஆரம்பித்து, 2026 ஆண்டு மார்ச் மாதத்தில் கிரகபிரவேஷம் செய்தார். மேற்படி வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்ய கடந்த மாதம் பனையகுறிச்சி கிராமத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்று பஞ்சாயத்து கிளார்க் மாரியப்பனை சந்தித்து என் மாமாவின் வீட்டிற்கு வரி நிர்ணயம் செய்து கொடுக்கும்படி கூறினேன். அவர் என்னிடம் ஒரு மாதம் கழித்து தன்னை சந்திக்கும்படி அனுப்பி வைத்தார். என்னை போன் மூலம் அழைத்ததின்பேரில் நான் 20/6/2026 தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திருச்சி சென்னை பைபாஸில் சஞ்சீவிநகர் அருகில் உள்ள நாகநாதர் டீ கடையின் அருகே வைத்து பனையகுறிச்சி கிராமம், பஞ்சாயத்து கிளார்க் மாரியப்பனை மீண்டும்

சந்தித்தபோது என் மாமாவின் வீட்டுவரி சம்பந்தமாக கேட்டேன். அவர் 25,000 ரூபாய் கொடுத்தால் வீட்டுவரி நிர்ணயம் செஞ்சி தருவதாக கூறினார். நான் 25,000 ரூபாய் எல்லாம் சார் வீட்டுவரியா என்று அவரிடம் கேட்டேன். அவர் அதற்கு நீ என்னப்பா பரியாதை ஆளா இருக்க. அது எனக்கு தனியாக கொடுக்க வேண்டிய பணம். 25,000 ரூபாய் கொடுத்தா வீட்டுவரி நிர்ணயம் செஞ்சி தருவேன். தராவிட்டால் நீ அலைஞ்சி கிட்டே இருக்க வேண்டியது தான் என்று சொன்னார். அதற்கு நான் சார் என் மாமாவிற்காகதான் கேட்கிறேன் கொஞ்சம் குறைச்சிக்கோங்க சார் என்று கேட்டேன். சரி உனக்காக குறைச்சிக்கிறேன் 15,000 ரூபாய் கொடு உனக்கு உடனே வீட்டுவரி நிர்ணயம் செஞ்சி கொடுக்கிறேன் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை இருந்தாலும் அப்போதைக்கு சரிசார் நான் 15,000 ரூபாய ரெடி செஞ்சிட்டு உங்களை வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் வீட்டுக்கு வந்த என் மாமாவிடம் விபரம் சொன்னேன். அவர் பணம் கொடுக்க வேண்டாம் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னார். இரண்டு நாள் businessல பிஸியா இருந்ததால் என்னால் வரமுடியவில்லை. பனையகுறிச்சி பஞ்சாயத்து கிளார்க் கேட்ட லஞ்சப்பணம் 15,000 ரூபாய் பணத்த ரெடி செஞ்சிட்டு, புகார்மனுவையும் தயார் செஞ்சிட்டு, இன்று 23/6/26 தேதி காலை சுமார் 8.00க்கு வந்து புகார்மனு கொடுக்கிறேன். என்னிடம் வீட்டுவரி செய்ய லஞ்சம் கேட்ட பனையகுறிச்சி பஞ்சாயத்து கிளார்க் மாரியப்பன் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx(Karthikeyan) 23.06.2026

Sir, Submitted to the Court of Hon'ble Principal District and Session Judge, Tiruchirappalli. Received this report at 08.00 hrs., on 23.6.26 and made Confidential Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.12/2026, u/s 7 of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.45 hrs., on 23.6.26. Sd.xxx (A.Prasanna Venkatesh) 23/6/26 Inspector of Police, V&AC, Trichy.

23/6/26
[A. Prasanna Venkatesh]
Insp V&AC Trichy.